

**Prof. Dr. S. J. Emmanuel**
Sandweg 4
48720 Rosendahl
Germany
Tel. 02545/919574
Mob. 1602753006
email: sjemmanuel@t-online.de

---

# 2016 மாவீரர் தினத்தில் நாம் தேடுவது
# எஞ்சிய வீரருக்கு மதிப்பும் உதவியும்
# தொடரும் போராட்டத்திற்கு வலுவும்
# தமிழ் தலைவர்களின் முயற்சிக்கு உதவியும்

அன்பான சகோதரரே,
எமது மண்ணையும் மக்களையும் பாதுகாக்க வீர
அர்ப்பணிப்புடன் போராடி
உயிர் நீர்த்த வீரரை,
ஈழத் தமிழர் அனைவரும்
நன்றியுடன் நினைவு கூருவது நிச்சயம் பொருத்தமானது,
போற்றத்தக்கது.

ஆனால் அத்துடன் நின்று விட முடியாது.

1. முள்ளிவாய்க்கால் முடிந்த பின்
பல துன்பங்களை அனுபவித்த முன்னைய போராளிகள்
எமது சமூகத்திற்குள் மீளவும் வாழத் துடிக்கின்றனர்.
ஆனால் எம்மவர் சிலர், புலத்திலும் நாட்டிலும்
அவர்களை மதிக்காது,
இகழ்ந்து விலக்கி வைக்கவும் துணிகின்றனர்.
இதையிட்டு நாம் எல்லோரும் வெட்கிக்கின்றோம்.

புலம் பெயர்ந்து வசதியுடன் வாழ்பவர்களும்,
போரின் கடசி நாட்களில்
பணம் சேர்த்தவர்களும்,
தமது உதவிக் கரங்களை நீட்ட
கடமைப் பட்டிருக்கின்றோம்.
.
2. தொடரும் போராட்டம் சர்வதேச மயமாக்கப்பட்டு,
எமது வீரத்தையும் ஒத்துழைப்பையும்
வேறு விதத்தில் வேண்டுகின்றது.
புதிய கட்டத்தின் தேவைகளை
புரியாது அல்லது உதவி செய்ய முடியாவிட்டால்,

தயவு செய்து விலகி நில்லுங்கள்,
குழப்பாதீர்கள். தடையாய் வராதீர்கள்.

புதிய கட்டத்தை புரிந்து கொண்டால்,
எந்த அமைப்பை சேர்ந்திருந்தாலும்,
உங்கள் நாட்டு அரசாங்கத்தின் வழியாக,
சர்வதேசத்தின் அழுத்தத்தை,
இலங்கை அரசாங்கத்திற்கு,
ஜனநாயக வழிகளில் தொடர்ந்து கொடுங்கள்.

3. உண்மை நீதி வெற்றியடையும்,
என்ற நம்பிக்கையும் துணிவுமின்றி
போராட்டம் தொடர முடியாது.
எம்மவரில் சிலர்,
நம்பிக்கையில்லாது விரக்தியில் இருந்து கொண்டு
மற்றவர்களையும் குழப்புகின்றனர்.
இது கண்டிக்ப் பட வேண்டியது.

நம்பிக்கையுடன் துணிவாக,
எமது மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட
தலைவர்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு
எம்மாலான ஒத்துழைப்பையும்
ஏலுமான உதவிகளையும்
செய்ய முன்வருவோம்.
அதுவே சிறந்தது.

*பணியாளன் இம்மானுவேல்*
*24.11.2016, பலேர்மோ, இத்தாலி*